[1989 நவம்பர் 1

* மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பப்பட்ட அந்த தீர்மானத்தை ஏற்றுக் கொள்வதற்கில்லை என்றும், மத்திய அரசு எடுத்த முடிவை மாற்றிக் கொள்வதற்கில்லை என்றும், ஆகஸ்ட் மாதமே மத்திய அமைச்சர் எனக்குத் தகவல் தெரிவித் திருக்கிறார்கள்.

(ஈ) வன்னியர் சங்கத்தினர் கிளர்ச்சியின்போது போடப்பட்ட வழக்குகளைத் திரும்பப் பெறுதல் மற்றும் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு நிவாரணம் அளித்தல்.

* திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு வன்னியர் போராட்டத்திலே சாலை மறியலில் ஈடுபட்ட பலபேர் துப்பாக் கிச்சூட்டில் இறந்திருக்கிறார்கள். பலபேர் பல வழக்குகளில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து பல பேரில் வழக்கு மன்றத்தில் வழக்குகள் இருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பு ஏற்றுக் கொண்ட பிறகு, அந்த வழக்குகளையெல்லாம், தகுதியின் அடிப்படையில் பரிசீலனை செய்து, திரும்பப் பெறலாம் என்று சொன்னார்கள். அதோடு, துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர்களுக்கு அப்போதிருந்த அரசாங்கம் ரூ. 5,000 உதவித்தொகையாக வழங்குவதாக இருந்தது. அது வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள். மேலும் காஞ்சிபுரத்தில் உள்ள காஞ்சிப் பெரியவர் அவர்கள்கூட, இவர்களுக்கு கொஞ்சம் பணம் கொடுக்கலாம் என்று சொல்லி, ஒவ்வொருவருக்கும் ரூ. 2,000 ரூ. 5,000 என்று சொல்லியிருக் கிறார்கள். அந்தப் பணம் அரசாங்கத்தில்தான் இருப்பதாகத் தெரிய வருகிறது.

தற்போது இனக் கலவரத்தில் இறந்தவர்களுக்கு ரூ. 25,000 கொடுக்கலாம் என்று இப்போதுள்ள அரசு அனுமதி கொடுத்

(11-50)

திருக்கிறது. அப்போது அந்தத் துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர் களின் குடும்பங்கள் பணம் வாங்க மறுத்துவிட்டார்கள். இப்போது கொடுத்தால் வாங்கிக்கொள்வதாக அரசாங்கத் திற்கு கடிதங்கள் எழுதி அனுப்பி இருப்பதாகத்

1989 நவம்பர் 1] [திரு. கோ. பூவராகன்]

தெரிகிறது. இதைப் பற்றி ஆராய்ந்து ஒரு முடிவுக்கு முதலமைச்சர் அவர்கள் வர வேண்டுமென்று சொல்லிக்கொண்டு, அதோடு தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் இருக்கின்றவர்கள் இப்போது முன்பிருந்த வேகம் தணிந்து அவர்கள் ஒரு முகமாக இனிமேல் அவ்வாறெல்லாம் நடப்பது இல்லை என்ற ஒரு முடிவுக்கு வந்திருப்பதாகத் தெரிகிறது. அவர்களையும் பரிசீலனை செய்து விடுவிப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மதுரை மாவட்டத்தில் இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு என்ன நிவாரண நிதி உதவி அளித்து இருந்தார்களோ அதையே ஏற்கெனவே வன்னிய சங்கம், ஆதிதிராவிடர்கள் ஆகியோருக்கு இடையில் ஏற்பட்டு, அதனால் பாதிக்கப்பட்டு இருக்கிற வன்னியர்களுக்கும் அதே நிவாரண உதவியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று நானும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வலியுறுத்துகிறேன். அதோடு சேர்த்து அவர்கள் மேல் பல்லாயிரக் கணக்கான வழக்குகள் பல காலங்களிலே போடப்பட்டிருக்கின்றன. இப்போது சுமுகமான நிலை ஏற்பட்டு அவர்கள் ஒரு அரசியல் கட்சியாக மாறி தேர்தலைச் சந்திக்கும் சூழ்நிலையில் அது போன்ற வழக்குகளையும் வன்னியர் சங்கத்தின் மேல் மட்டுமல்லாமல் ஆதிதிராவிடர்கள் மேல் உள்ள வழக்குகளையும் அரசு வாபஸ் பெற வேண்டுமென்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வற்புறுத்துகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நண்பர் பூவராகன் அவர்களும், மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் திருநாவுக்கரசு அவர்களும் வன்னிய சங்கத்தின் பெயரால் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற கிளர்ச்சிகளைக் குறித்தும், அதிலே உயிர் இழந்தவர்களுக்குக் குடும்பப் பாதுகாப்பு நிதி அளிப்பது குறித்தும் கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். திரு. பூவராகன் அவர்கள் பேசும்போது ஏற்கெனவே இருந்த அரசு அளித்த தொகையை அவர்கள் வாங்க மறுத்துவிட்டார்கள் என்று குறிப்பிட்டார். அப்போது அளிக்கப்பட்ட தொகை 5 ஆயிரம் அல்லது 10 ஆயிரம் என்று நான் கருதுகின்றேன். காஞ்சியி

லிருந்து திருமிகு சங்கராச்சாரியார் அவர்கள் மூலமாக அனுப்பப் பட்ட தொகை என்ன ஆயிற்று என்று கேட்டார். இதுபோன்ற விவரங்களை ஒரு நாள் முன்கூட்டிச் சொல்லி, அது குறித்து விவரங்களை நான் சேகரிப்பதற்கு அவர்கள் தவணை தந்து இருப்பார்களேயானால் விவரங்களைச் சொல்ல இயலும். 25 ஆயிரம் ரூபாய் அவர்களுக்குத் தர வேண்டுமென்று சொல்லப் பட்ட அந்தக் கருத்தையும், போடி கலவரத்திலே உயிர் இழந்தவர் களுக்குத் தரப்பட்டது போல 25 ஆயிரம் ரூபாய் தர வேண்டு மென்று சொல்லப்பட்ட கருத்தையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். என்றாலும் கூட அவர்கள் அந்தத் தொகையை ஏற்றுக்கொள்வ தாக இருந்தால்—இதுவரையிலே தரப்பட்ட தொகை போக 25 ஆயிரத்தில் மீதித் தொகை அவர்களுக்கு நிச்சயமாக வழங்கப் படும், அவர்கள் ஏற்றுக்கொள்வதாக இருந்தால் என்பதனையும் நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

இன்னொன்று அவர்கள் மீது போடப்பட்டுள்ள நூற்றுக் கணக்கான வழக்குகள் கடந்த காலத்தில் தொடரப்பட்டுள்ள நூற்றுக் கணக்கான வழக்குகளைத் திரும்பப் பெற வேண்டும். அதை இந்தப் பேரவையிலே நான் முன்னர் அறிவித்து இருப் பதையும் அவர்கள் நினைவுபடுத்தி இருக்கிறார்கள். நான் அறிவித்தது உண்மை. கடந்த கால ஆட்சியில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களில் குறிப்பிட்ட சில வழக்குகளும், பொது வான பல வழக்குகளும் தொடரப்பட்டு இருக்கிறது. நான் அப்போதே சொன்னேன், குறிப்பிட்ட சில பயங்கரமான வன்முறை வழக்குகளைத் தவிர மற்ற எல்லா வழக்குகளும் திரும்பப் பெறப்படும் என்று அன்றைக்கே சொன்னேன். வன்னி யர்கள் மீது மாத்திரமல்ல ஆதிதிராவிட மக்கள் மீதும் தொடரப் பட்ட வழக்குகள் திரும்பப் பெறப்படும் என்று சொன்னேன். அந்த ஆணையில் நேற்றையதினம் நான் உத்திரவு பிறப்பித்து விட்டேன் கையெழுத்திட்டு என்பதை இந்த அவைக்குத் தெரிவித் துக்கொள்கின்றேன்.

(உ) மழையால் பாதிக்கப்பட்டுள்ள மதுரை நகர் பேருந்து நிலையங்களைச் சீர்படுத்துதல்.

திரு. சோ. பால்ராஜ்: பேரவைத் தலைவரவர்களே, மழைக் காலங்களில் மதுரை நகரத்து பொதுமக்கள் மிகவும் அவதிப்படு கிறார்கள். மையப் பேருந்து நிலையத்திலும், அதற்குப்